★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 புரட்டாதி 19 ஜுல்-கஜ் 27 இதழ் 234

யாழ்ப்பாணம் புதன்கிழமை 5 10 83

## தி.மு.க மனு: ஐ. நா.வில் நேரில் கையளிக்கப்படும்

(சென்னை)

திருகோணமலையை அமெரிக்காவின் கேந்திர நிலையமாக மாற்ற இலங்கைஅரசு முயன்று வருவதாக திராவிட முன்னேற்றக் கழக தலைவர் திரு. மு. கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சருடன் இலங்கை அதிபர் நடாத்திய பேச்சுக்கள் குறித்து நேற்று நிருபர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயேஅவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

இலங்கைத் தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்ட கொடுமைகள் குறித்து தமிழக மக்களின் கண்டனத்தைத் தெரிவிக்கும் ஒன்றரைக்கோடி மக்களின் கையெழுத்து மனுவை ஐ.நா.வுக்கு தபாலில் அனுப்பாமல் நேரில் கையளிப்பதென்று தி. மு. க. தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்த திரு. கருணாநிதி, இம்மனுவை தி. மு. க. சட்டத்தரணி திரு. ராதாகிருஷ்ணன் நேரில் சென்று கையளிப்பார் என்றும் தெரிவித்தார். (கு)

## அப்துல் கயூம் மீண்டும் தெரிவு

லண்டன் அக் 4

மாலைதீவின் ஜனதிபதியாக இரண்டாவது தடவையாகத்

[8ம் பக்கம் பார்க்க]

# தடை செய்யப்பட்ட இயக்கத்தினரைத் தேடி வவனியா காடுகளில் ஆயுதப்படை தேடுதல்

(நமது வவனியா நிருபர்)

தடை செய்யப்பட்ட இயக்கத்தை சேர்ந்தவர்கள் வவனியா பகுதியிலேயே நடமாடுவதாக பொலிசாருக்குக் கிடைத்துள்ள தகவல்களைத் தொடர்ந்து வவனியாப் பகுதி காடுகளில் ஆயுதப்படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இத்தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பெருமளவு ஆயுதப்படையினர் வவனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள பெருமளவு இரகசியப் பொலிசாரும் வவனியா வந்துள்ளனர்.

வவனியாவில் ஆயுதப்படையினரின் பாவனைக்காக சுவீகரிக்கப்பட்ட நகரசபை மண்டபத்தில் ஆயுதப்படையினரின் சகல பிரிவினரும் முகாமிட்டுள்ளனர். [கு]

## 12-ம் திகதியே கண்டனஊர்வலம்

[சென்னை]

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இலங்கை அதிபரும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரும் நடாத்திய பேச்சுவார்த்தைகளைக் கண்டித்து அ. தி. மு. க. நடாத்தவிருந்த கண்டன ஊர்வலம் இம்மாதம் 12-ம் திகதியே நடைபெறும் என்று கட்சியின் செயலாளர் திரு. பா. உ. சண்முகம் தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டமிட்ட 10ம் திகதி விடுமுறைநாளாதலால் இவ்வூர்வலம் 12ம் திகதி நடாத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். [கு]

## குருநகர் அகதிகள் முகாமிற்கு மேலும் 13 பேர் வந்தனர்

[யாழ்ப்பாணம்]

குருநகர் அகதிகள்முகாமிற்கு மாத்தளையிலிருந்து 13 பேர் நேற்று புதிதாக வந்துள்ளனர்.

மாத்தளைபகுதியில் ஏற்பட்ட பதட்ட நிலையைத் தொடர்ந்தே இவர்கள் யாழ்ப்பாணம் வந்ததாக தெரிகிறது.

இதேவேளை குருநகர் அகதிகள் முகாமை நிர்வகித்துவரும் யாழ். லயன்ஸ் கழகத்தினர் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில், அகதிகளுக்கு விநியோகிக்க உடுபிடவைகளும், விறகும் தாய்மார் சிசுக்களுக்கான மருந்துவகைகளும் அவசியமாக தேவைப்படுவதாகவும் இவற்றை வழங்க விரும்புபவர்கள் லயன்ஸ் கழகத்திடம் ஒப்படைக்குமாறும் தெரிவித்துள்ளனர், ]கு]

## சட்டவிரோத மின்பாவனை: 8 பேர் 'வலை'யில்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரத்தில் சட்டவிரோதமாகமின்சாரம் பாவிப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட மாநகரசபை உத்தியோகத்தர்கள் 8 இடங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதைக் கண்டுபிடித்துள்ளனர்.

அரியாலை, நாயன்மார்கட்டுப் பகுதிகளிலேயே சட்டவிரோதமாக மின்பாவித்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திடீர் பரிசோதனைக்குழு யாழ். நகரத்திலுள்ள பல இடங்களுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (மா)

## மட்டக்களப்பு சிறை உடைப்பு: 120 சாதாரண கைதிகள் இதுவரை சரணடைந்தனர்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற கைதிகளில் இதுவரை 120 பேர் சரணடைந்தும் கைதுசெய்யப்பட்டுமுள்ளனர்.

இதுவரை சரணடையாத

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வன்முறைச் சம்பவங்கள்: சரியான விளக்கம் விரைவில் இந்தியாவுக்கு ஏற்படும்!

### புதுடில்லியில் டக்ளஸ் லியனகே நம்பிக்கை

(புதுடில்லி)

இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சரியான விளக்கம் இந்தியாவுக்கு விரைவில் ஏற்பட்டுவிடும் என்று இலங்கை ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று ஆரம்பமான உலக உல்லாசப் பிரயாண ஸ்தாபனத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் வாழும் இரு இனங்களுக்கிடையே இருந்து வந்த மனவேறுபாடுகளை அரசுக்கெதிரான சில தீயசக்திகள் பயன்படுத்தியதே அண்மைக் கலவரங்களுக்கு காரணம் என்று குறிப்பிட்ட திரு. லியனகே, இந்தியா தொடர்பாக இலங்கையில் ஏற்பட்டிருக்கும் தப்பபிப்பிராயமும் விரைவில் நீங்கிவிடும் என்றார். (கு)

## மோட்டார் சைக்கிளுடன் 8 ஆயிரம் ரூபா கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கி முனையில் மோட்டார் சைக்கிளுடன், 8 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் நிலையம் முன்பாக வைத்து இவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சின்னத்துரை மனோகரன் என்பவர் மோட்டார் சைக்கிளில்வந்துகொண்டிருந்தபோது இரு வாலிபர்கள் துப்பாக்கி முனையில் மோட்டார் சைக்கிளையும், அவரிடமிருந்த 8ஆயிரம் ரூபாவையும் கொள்ளை அடித்துக்கொண்டுசென்றதாக சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். [மா]

## தகர்க்கும் கருவி கொள்ளை: 16 ஊழியர் விசாரணை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெருந்தெருக்கள் திணைக்களத்தில் தகர்க்கும் கருவி கொள்ளை தொடர்பாக மேற்படி திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்கள் 16 பேர் பொலிசாரால் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி திணைக்களத்திற்கு புதிதாகக் கொண்டுவரப்பட்டு இதுவரை பாவிக்காமல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இக்கருவி பற்றியவிபரம் கொள்ளைக்காரர்களுக்கு எவ்வாறு தெரியவந்தது என்பது குறித்து பொலிசார் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இந்தக் கருவி இத்திணைக்களத்தில் இருப்பது பற்றி இரு உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே தெரிந்திருந்தும் இக்கருவி கொள்ளையடிக்கப்பட்டது பெரும் மர்மமாக இருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் நூர்டீன் தலைமையிலான விசேட பொலிஸ்பிரிவு ஒன்று இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

## கைதடி அகதிச் சிறுவர்க்கு பாடசாலை உபகரணங்கள்

(சாவகச்சேரி)

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் இலங்கைக்கிளையினர் கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் 115 பாடசாலைச் சிறுவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்புச் செய்தனர்.

வடமாகாண சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் வேண்டுகோளுக்கமைய இலங்கைக் கிளையின் காப்பாளரும் முன்னாள் எம். பியுமான திருமதி குசலா அபயவர்த்தன இவ்வன்பளிப்புக்கான நிதிஉதவியை அளித்தார்.

இவ்வுபகரணங்கள் அன்பளிப்பு வைபவத்தின் போது சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் இங்கிலாந்துக் கிளை உறுப்பினர் திரு. நீ. யோகநாதன், வடமாகாணக் கிளைத்தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர். (அ)

## ஹெக்டருக்கு சபையில் அனுதாபம்

(கொழும்பு)

காலஞ் சென்ற திரு. ஹெக்டர் கொப்பேகடுவவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை ஒன்று நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சபை நேற்றுப் பிற்பகல் கூடியபோது பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா அனுதாபப் பிரேரணையை சமர்ப்பித்தார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரியில் சந்தை, பள்ளிக்கூடம், தபாற்கந்தோர், ஆஸ்பத்திரி இவற்றிற்கு அண்மையில் 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், சிங்கரத்தினம், சோப்பாய் தெற்கு, கோப்பாய். 9036

வீட்டுச் சொந்தக்காரர் வெளிநாடு செல்லவிருப்பதால் எலெக்றிக் வெல்லிங் குக்கர், வோசிங் மெசின் (Washing Machine) ரேப் ரெக்கோடர்ஸ் மற்றும் தளபாடங்கள் உட்பட வீட்டுப்பாவனைப் பொருட்கள் விற்பனைக்குண்டு. Dr. அருளையா 21, சேர். பொன். இராமநாதன் ரோட், யாழ்ப்பாணம். 9099

திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் இரண்டு வீடு கட்டக்கூடிய நீள் சதுரக்காணி. நாச்சிமார் கோயிலடி கே. கே. எஸ். வீதிக்கு அண்மையில் சபாபதி வீதியில் 5 பரப்புடைன வீடு இருபாலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குப் பின் பக்கமாக 4 பரப்புக்காணி (கொங்கமையில்) விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: S சங்கரலிங்கம் தலங்காா் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி. 9088

பியர் அல்சேஷன் நாய்க்குட்டிகள் (ஆண் பெண்) விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். (புத்தூர் மிஷன் ஆஸ்பத்திரிக்கு முன்னுல்) M. B. சந்திரா புத்தூர் கிழக்கு, புத்தூர். 9092

1 Sri 8340 Minor 1000 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய இடம் Jaffna Trading Company 79, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 9104

## தேவை

பிட்வை வியாபாரத்தில் ஐந்து வருடங்கட்கு மேற்பட்ட அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. சான்றிதழுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். கே. நாகமுத்து அன்சன், பெரிய கடை, யாழ்ப்பாணம். 9069

T. V. வீடியோ டெக் றிப்பியறிங் செய்யக்கூடியவர் தேவை. சம்பளம் ரூபா 1500க்கு மேல் வழங்கப்படும். முழுவிபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 90c0 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9060

கல் உடைக்கும் கிறசர் மேற்பார்வையாளர் தேவை. அனுபவமுள்ளவர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். தங்குமிடவசதியுண்டு. சிவபாதம் கிறஸர், அச்சுவேலி. 9090

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு வர்த்தகப் பொருட்களை வானில் சென்று விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர் தேவை. சம்பளத்துடன் விற்பனை அலவன்ஸ் கொடுக்கப்படும். அனுபவம் உள்ளவரும், பிணைப்பணம் கட்டக்கூடியவரும் உடனடியாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9103 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9103

## தேவை

வர்த்தக ஸ்தாபனமொன்றின் இசுஸ் E. L. F. 350CC வாகனம் செலுத்தக்கூடிய அனுபவமுள்ள ஒருவர்தேவை. வடபகுதிக்கு பொருட்களை விநியோகிப்பதற்கு ஏற்றவராகவும் உள்ளவர் சம்பள விபரங்களை நேரில் கதைத்துக்கொள்ளவும். விளம்பர இல: 9101, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9101

பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு காசாளர் ஒருவர் தேவை. வயது 30க்கும் 45க்கும் இடைப்பட்டவரும், பிணைப்பணம் கட்டக்கூடியவரும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9102. மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9102

நல்ல நிலைமையிலுள்ள Honda C 70, C 90 தேவை. புனரமைக்கப்பட்டதாகவும் இருக்கலாம். விற்பனைக்குள்ளவர்கள் வாகனத்தின் இலக்கத்தையும் சந்திக்கும் நேரத்தையும் கீழுள்ள முகவரிக்கு அனுப்பவும். வி. நவரத்தினம், 90, கலட்டி முந்தல் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 9085

## கல்வி

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழுடன் நீங்கள் வெளிநாடு செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம். ஒருமாத வெல்டிங், வயரிங், மோட்டர் மெக்கானிசம் வகுப்புகள் நடைபெறுகின்றன. J. E. C. 38, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 9096

G.C.E. A/L 84/85புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன. கணக்கியல்-மரியதாஸ், பொருளியல் - குமாரவேல், இந்து நாகரீகம்-அருள்நங்கை, அளவையியல்-சுதாகர், தமிழ்-மீரா. J. E. C. 33, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 9095

## வாடகைக்கு

றக்காரேட் காமல் கொன்வென்ற் அருகில் No. 62இல் இருக்கும் கடை வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும் E. R மரியாம்பிள்ளை, 16, ரெம்பிள்ரேட் லேன், யாழ்ப்பாணம். 9091

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9086

## தவறிவிட்டது

C. D. 125 ஹொண்டா மோட்டார் சயிக்கிளின் C. D. 125 எனக்குறிக்கப்பட்ட இடது பக்க கவர் தவறிவிட்டது. அதன் உள் உறையில் வாகனச் சாரதிலைசென்ஸ், இன்சூரன்ஸ் வரிசெலுத்திய பற்றுச்சீட்டு என்பன உள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்விலாசத்திற்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். ஆ. ஐ. சச்சிதானந்தன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை விடுதிக்கட்டடம் சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 9097

## வைத்தியம்

இணுவில் பகுதியில் நல்ல நிலையில் இயங்கிவரும் டிஸ்பென்சரி கமிஷனுக்கு அல்லது வாடகைக்கு உண்டு. ஆங்கிலம்/ஆயுர்வேத வைத்தியத்திற்கு சிறந்தது விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 9019 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9019

## விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை 3ம் வட்டாரத்தில் மின்சார வசதியுள்ள இடத்தில் வீடுகட்டக் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; க. கிருபானந்தன் பருத்தித்துறைவீதி, கிராம்புவில், சாவகச்சேரி. 9100

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, ரோட், இல.85, காலஞ்சென்ற வேலாயுதர் சின்னையா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன ]
நியாதிக்கம் ]
இல. ரி-3726

வேலாயுதர் சின்னையா கைம்பெண் கனகம்மா, இல. 85, கொழும்புத்துறை ரோட், யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் ஆதனத்தை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1983-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1983-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்
மனுதாரின் சட்டத்தரணி
9066

## புதிய தலைவர்

(கொழும்பு)

மீன்வளக் கூட்டுத்தாபனத்தின் புதியதலைவராக திரு எஃப் ஆர். எஸ். சி. பெர்னுண்டோ புள்ளே நியமிக்கப்பட்டுள்ளார்.

## FOR SALE

DATSUN Sunny G. L. Naps B211 Model 11 Sri 7500 Series with oxtras. Seen at 55 Beach Road, Jaffna. 9093

Mitsubshi Lancer 1400 Station Wagon Top condition One owner 48, Kandy Road, Chundikuli. Phone 22392 9084

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## யாழ்ப்பாணம் அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 10 - 10 - 83 - ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்
தொலைபேசி எண்: 22617
376, பிரதான வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 9067

## உடன் விற்பனைக்கு

### 29 ஸ்ரீ 1495 — ரேசா

விண்ணப்பங்கள் 15 10-19 3திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டியது:
சட்ட அதிகாரி.

**த பினன்ஸ் கம்பனி லிமிடட்,**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680.

## வெளிநாடுகளில் வேலை செய்வதற்கேற்ற தொழிற்பயிற்சி பெறுவதற்கு அரிய சந்தர்ப்பம்

கீழ்க்குறிப்பிட்ட பயிற்சி வகுப்புகள் 15-10-83ல் ஆரம்பமாகின்றன.

1. வெல்டிங் (WELDING)
   அ. ஒரு மாத முழு நேர வகுப்புகள்
   ஆ. 3 மாத வார இறுதி வகுப்புகள்
2. பிளம்பிங் (PLUMBING)
   ஒரு மாத முழு நேர வகுப்புகள்
3. மோட்டார் மெக்கானிசம் (MOTOR MECHANISM)
   ஆறு மாத வாரஇறுதி வகுப்புகள்
4. மின்சார வேலைகள் (ELECTRICAL WORKS)
   அ. வீடு, வர்த்தக நிலையங்களின் மின்சார வயறிங் – ஒரு மாத பகுதி நேர வகுப்புகள்.
   ஆ. மின்சார பொறியியல் துறை டிப்ளோமா. (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)
   6 மாதஇடை நேர வகுப்புகள்
5. கம்பியூட்டர் புரொகிரமிங் COMPUTER PROGRAMMING)
   (செய்முறை அறிமுறை உட்பட)
   6 மாத வகுப்புகள்
6. ஆங்கில வகுப்புகள்
   அ SPOKEN ENGLISH 3 மாத வகுப்புகள்
   ஆ. 6 மாத கால வகுப்புகள்

★ மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உண்டு. இவ் ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்பத்திரத்தில் உடன் விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,**
59, சென். பற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பாணம்.
(9078)

## அரிய சந்தர்ப்பம்

### Computer Programming BASIC-COBOL

Computer மொழிகளில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.

- T. V.
- வீடியோ டெக் றிப்பியறிங்
- எலக்றிக்கல் வயறிங்
- Hotel Management
- வெல்டிங்
- எயர்கொண்டிசனிங்

SPOKEN ENGLISH, FRENCH

**புதிய பயிற்சிகள் ஆரம்பம் : 14-10-83**

**The School of Computer Studies**
52/1, கனகரத்தினம் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, – – யாழ்ப்பாணம்.

### அணிசேரா நாடுகளின்

# வெளிநாட்டமைச்சர்கள் மகாநாடு நியூயோர்க்கில் ஆரம்பம்

நியூயோர்க், அக். 4

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் எத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்பது தொடர்பாக அணிசேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இன்று நியூயோர்க்கில் கூடி ஆராயவுள்ளனர்.

இதுதொடர்பான அணிசேரா நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாடு 3நாள் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டிற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தலைமை வகிப்பார்.

அணிசேரா நாடுகள் இயக்கத்தின் தலைவியான இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அண்மையில் நியூயோர்க்கில் உலகத்தலைவர்களுடன் நடத்திய உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களின் விவரங்களை இம் மகாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் அணிசேராநாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுக்கு விளக்கிக்கூறுவார்.

கடந்த மார்ச் மாதம் புதுடில்லியில் நடைபெற்ற அணிசேராநாடுகளின் 7-வது மகாநாட்டில் உலகின் பல்வேறு பிரச்னைகள் பற்றி ஆராயப்பட்டது தெரிந்ததே. (வெ)

## தலை வழுக்கையை போக்க அக்குபங்சர் சிகிச்சை

பீக்கிங், அக் 4

தலை வழுக்கையைப் போக்கிதலைமயிர்வளரச் செய்ய அக்குபங்சர் வைத்திய முறையில் சிகிச்சைமுறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீன அக்குபங்சர் வைத்திய நிபுணர் ஜான் சிங்கி என்பவர் கண்டுபிடித்துள்ள இச் சிகிச்சை முறைக்குள்ளானவர்களுள் 90 சதவீதமானோர் வெற்றியடைந்துள்ளனர்.

இச் சிகிச்சைமுறை 3 தொடக்கம் 6மாதம் வரை அளிக்கப்படுமாம்.

## ஜப்பானில் எரிமலை வெடித்தது!

டோக்கியோ. அக். 4

ஜப்பானில் எரிமலையொன்று வெடித்துள்ளது ஆனாலும் இதனாலேற்பட்ட சேதம்பற்றி உடனடியாக அறிவிக்கப்படவில்லை

முதலில் வெளியான செய்திகளின்படி மூன்று கிலோமீட்டர் தூரத்திற்கு எரிமலைக்குழம்பு பரவியுள்ளதாகக்கூறப்பட்டது. இந்த எரிமலை 714 மீட்டர் உயரமானது (வெ)

# பங்களாதேஷில் சட்டமறுப்பு முஸ்தீபு

டாக்கா, அக். 4

பங்களாதேஷ் இராணுவ அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதியை அறிவிக்காவிட்டால், சட்டமறுப்பு இயக்கம் நடத்தப்போவதாக பங்களாதேஷின் முன்னாள் அதிபரொருவர் தெரிவித்துள்ளார்.

டாக்காவில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் முன்னணிக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (வெ)

## லெபனானில் யுத்த நிறுத்தம் மீறப்பட்டது

பெய்ரூட், அக். 4

லெபனானில் யுத்த நிறுத்தம் மீறப்பட்டுள்ளது. பெய்ரூட்டின் தென்புறநகரில் மக்கள் படையும், அரசாங்கத்தின் இராணுவமும் ஒரு மணித்தியாலம் யுத்தத்திலீடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிரியாவும், சவூதி அரேபியாவும் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக லெபனானில் கடந்த சில வாரங்களாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

லெபனான் பிரதம மந்திரியும் தேசிய அரசொன்றை ஏற்படுத்தும் பொருட்டுத் தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்ததும் தெரிந்ததே. (வெ)

## அசாமில் விசாரணை மன்றங்கள்

கௌகாத்தி அக். 4

அசாம் மாநிலத்தில் வெளிநாட்டவர் பிரச்னைபற்றி ஆராய்வதற்கான 10 விசாரணை மன்றங்கள் அமைக்கப்படும் என்று அம் மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். [வெ]

## கப்பல் வாங்க மத்தியஅரசு அனுமதி

சென்னை, அக். 4

தமிழ்நாடு அரசிற்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கப்பலொன்றை வாங்குவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இத் தகவலை மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு விஜயபாஸ்கரரெட்டி தெரிவித்தார்.

மூன்று கப்பல்களை வாங்க அனுமதிக்குமாறு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம் மத்தியஅரசைக் கேட்டிருந்தது. (வெ)

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

புதுடில்லி, அக். 4

மணிப்பூர் சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பின்போது எதிர்த்தரப்பினர் சபையிலிருந்து வெளியேறினர். (வெ)

## சீனவெளிநாட்டமைச்சர் நரசிம்மராவ் சந்திப்பு

நியூயோர்க், அக். 4

இந்தியவெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் நேற்று நியூயோர்க்கில் சீன வெளிநாட்டமைச்சரை சந்தித்து 35நிமிடங்கள் உரையாடினார்.

இச்சந்திப்பின் போது சர்வதேசப்பிரச்னைகள் குறித்தும் இருதரப்பு உறவுகள் பற்றியும் இருவரும் பேச்சுக்கள் நடத்தியதாகக் கூறப்பட்டது.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ. நா. சபையின் 38-வது கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் பொருட்டு நியூயோர்க் சென்ற இந்திய, சீன வெளிநாட்டமைச்சர்கள் தற்போது அங்குதங்கி பல்வேறு உலக நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களையும் சந்தித்து சர்வதேச விவகாரங்கள் குறித்து பேச்சுக்களை நடாத்திவருகின்றனர். (வெ)

## புங்குடுதீவு வடகரை அணைப்பாதைவேலை வருடஇறுதிக்குள்நிறைவு பெறும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுவடகரை அணைப்பாதை வேலைகள் வருட இறுதிக்குள் பூர்த்தியாகிவிடும்'' என்று புங்குடுதீவு வடகரை அணைப்பாதையில் பதினையாயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் பாலத்துக்கான அத்திவாரக்கல்லை நாட்டி வைத்துப் பேசுகையில் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத் தலைவரான சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

''பொது மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பு இருக்குமானால் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு புங்குடுதீவு வடகரை துணைப்பாதை சிமரதானவேலை ஒரு எடுத்துக்காட்டாகும். ஏழுமாதகாலத்திற்குள் ஐயாயிரம் அடி நீளத்துக்கு அணைப்பாதை அமைக்கப்பட்டமை பெரிய சாதனை. இந்தப் பணியில் முனைப்போடு செயற்பட்ட தாய்மார்கள் பாராட்டுக்குரியவர்கள். அடுத்த வருடத்துக்குள் இப்பாரிய பணி முற்றுப்பெற்றுவிடுமென எதிர்பார்க்கும் மக்களின் நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது. இப்பணி நிறை

(7ம் பக்கம் பார்க்க)

### வங்காளக்கடலில் நிலை கொண்டிருந்த

# காற்று அமுக்கம் கடலைக் கடந்தது

புதுடில்லி, அக். 4

வங்காளக் கடலில் நிலை கொண்டிருந்த காற்று அமுக்கம் விசாக பட்டினத்திற்கு வடக்கே கடலைக் கடந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் விசாக பட்டினத்திலும், கலிங்க பட்டினத்திலும் கடும் புயற்காற்று வீசுமென்று அஞ்சப்பட்டது.

இக்காற்று அமுக்கம் 50 கிலோ மீட்டர் வட மேற்குத் திசையை நோக்கி வலுப்பெற்றிருந்தது. (வெ)

## ஓமந்தை முகாமில் 71 அகதிகள்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற கலவரங்களையடுத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் தஞ்சம்புகுந்திருந்த 71 அகதிகளும் வவனியாவிலுள்ள ஓமந்தை அகதிகள் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான இலவச புகையிரதப் பயணச்சீட்டுகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. பிரட்மன் வீரக்கோன் வழங்கினார்.

இவர்களை ஓமந்தை அகதிகள் முகாமிற்குகொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் மேற்கொண்டிருந்தார்.

## ரயில் தரிப்பில் மாற்றம்

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்திலிருந்து பிரதி செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் காலை 6-45 மணிக்கு கொழும்புக்குப் புறப்படும் ரயில் தரித்துச் செல்லும்இடங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாற்றம் கடந்த வியாழக்கிழமை முதல் ரயில்வே திணைக்களத்தினால் அமுல்செய்யப்பட்டு வருகிறது.

இம்மாற்றத்தின்படி தலைமன்னார் துறைமுகத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படும் ரயில் மன்னார், அனுராதபுரம், குருநாகல், பொல்காவலை, கோட்டை ஆகிய ரயில்நிலையங்களிலேயே தரித்துச் செல்லும்.

இதுவரை காலமும் தலைமன்னார் துறைமுகத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயில் சகல ரயில் நிலையங்களிலும் தரித்துச் சென்றது. இதே வேளை கொழும்பிலிருந்துதிங்கள், புதன் வெள்ளி ஆகிய தினங்களில் மாலை 5-45 மணிக்கு தலைமன்னார் துறைமுகத்திற்குச் செல்லும் ரயில் வழமைபோல் பொல்காவலை, குருநாகல், அனுராதபுரம், மன்னார், தலைமன்னார் துறை ஆகிய ரயில் நிலையங்களிலேயே தரித்துச் செல்லும்.

## தந்தை செல்வா நினைவாலய வேலைகள்

(சாவகச்சேரி)

தந்தை செல்வா நினைவாலயத்திற்கான சுவர்கட்டும் மீதி வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை தந்தை செல்வா அறங்காவல் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

நினைவாலயத்திற்கான பாதுகாப்புச் சுவர் எழுப்பப்படாததன் காரணமாகவே இந்நினைவாலயத்தினை சில விஷமிகள் விரும்பத்தகாத சில நடவடிக்கைகளுக்ககப் பாவித்து வருவது மிகவும் கவலைக்குரியதாகவுள்ளது என அறங்காவல் குழுவினர் கவலை தெரிவித்துள்ளனர். (க)

# வெள்ளப்பெருக்கு: 464 பேர் பலி!

புதுடில்லி, அக். 4

உத்தர பிரதேசத்தில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கிற்கு இதுவரை 464 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வெள்ளப் பெருக்கினால் ஆயிரத்திற்குமதிகமான கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இந்த வெள்ளப் பெருக்கையடுத்து உத்தரப் பிரதேசத்தில் சர்ம நோயொன்று பரவிவருவதாகவும், இந்நோய்க்கு இதுவரை 200 பேர் பலியாகியுள்ளதாகவும் மாநில சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (வெ)

## ரூ. 3 கோடி 50 லட்சம் முற்பணம்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற கலவரங்களின் போது பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும், உடமைகளுக்கும் முற்பணமாக 3கோடி 50லட்சம்ரூபாவை தேசிய காப்புறுதிக்கூட்டுத்தாபனம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான 1600 விண்ணப்பங்களை இக்கூட்டுத் தாபனம் பரிசீலனை செய்து வருகிறது, பரிசீலனை முடிந்த பின்னர் இவற்றிற்கும் நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. (வெ)

## மணிவாக்கு

எல்லாரும் மடையர்கள்; அளவில்தான் ஏற்றத் தாழ்வு.

—ஆங்கிலப் பழமொழி.

# நமது நோக்கு

## அனைவருக்கும் அபாயம்

தமிழ்மக்களின் தீர்த்து வைக்காத பிரச்னை இனக் குரோதமாகிமுற்றிநாட்டில் இன்னொரு பெரு நெருக் கடியை உற்பத்தி செய்துள் ளது.

ஆட்சிக்கு அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இனக் குரோதத்திலும் வகுப்பு வாதத்திலும் அரசியல் வியாபாரம் நடத்தியதை நாம் நன்ருக உணர்கின் ருேம்: நெருப்புடன் விளை யாடியவர்கள் இன்று அதனை அணைக்கத்தெரியாது தடுமாறுகின்றனர்.

மக்கள் இதனை சரிவரப் புரியாததனுல்-இன்றும் அது தெளிவு பெருததனுல்- இவ் வித நெருக்கடி தொட ரவோ, அல்லது தற்காலிக மாகத் தீர்க்கப்பட்டால்- மீண்டும் தலைதூக்கவோ முடியும்.

அரசாங்கங்களில் பழி சுமத்தும்போது, அதற்கு உறுதுணையாகவிருந்த மக் களை நாம் மறந்துவிட வில்லை; 'மக்கள்' என்று குறிப்பிடும்போது இன்று இந்த காட்டுமிராண்டிநாட கத்தை நடத்தி வைத்தவர் களையோ, அல்லது அதற்கு நேரடிப் பொறுப்பாக விருந்த அவர்களின் 'சண் டித்தனத்' தலைவர்களையோ நாம் பிரத்தியேகமாகக் கருதவில்லை.

சண்டைக்கு இருபகுதிகள் அவசியம்; இன்று இமயம் போல் வளர்ந்திருக்கும்இன வெறுப்புக்கும் போர் நிலை மைக்கும் நாமும் பொறுப் பேற்கவேண்டும்.

பாராளுமன்றப்பதவி என்ருல் சுவர்க்கமென்று கருதி போட்டியிட்டு அங்கு தங்கள் விடயங்களை 'அளந்து கொட்டிவிட் டால்' நியாயமான விலை கிடைக்குமென்று நம்பி நடந்தவர்கள் இன்று இந்த இக்கட்டான நிலைக்கு தங்கள் பங்களிப்பை வழங் கியவர்கள்; கட்சி அரசியல் இங்கும் நஞ்சு கக்கியிருக் கிறது.

நாமிதனை விரிக்கமுயன் ருல் முடிக்கத்தெரியாது மலைக்கவேண்டுமென்ற கார ணத்தால் இத்துடன் நிற்க வேண்டியிருக்கிறது.

இந்த நாட்டில் நாமிரு வரும்-சிங்கள தமிழ் மக்கள் சமாதானமாக வாழவேண் டியவர்கள்; அதற்குரிய அர சியல் முறை காண்பதில் பெருந் தவறுகள் ஏற்பட்ட தனுல் பகைமை முற்றி இவ் வளவு தூரம் இவ்வளவு காலம் அது மீண்டும் மீண் டும் தமிழர்களையே பலி யெடுத்தது. இதனைத் தடுக்கமுடியாத நிலைமை உண்டானதற்கு எமது தலை வர்களும் பொறுப்பேற்க வேண்டும்; வகுப்புவாதம் ஒருதலைப்பட்டதல்ல.

இந்த அடிப்படையில் தான் எவ்வித சமானத் துக்கும் இடமுண்டு.

எந்தச் சமாதான பிரயத் தனங்களும் இன்றைய அகதி களின் பிரச்னையில் தொட ங்கவேண்டுமென்பது எமது கருத்து; அது பாதிக்கப் பட்ட மக்களின் முதலாவது தேவை; அதேசமயம் அர சாங்கத்தின் மனமாற்றத் துக்கும் அது ஒரு தெளி வான பரீட்சை.

அகதிகள் பிரச்னை மிக ஆழமானது. முரண்பாடு முற்றிய சிக்கலான பிரச்னை; சாதாரண உதாரணம்: விசர் மாறியபின் தான் விவாகம்; ஆனுல் விவாக மானுல்தான் விசர் மாறும்; எனவே தமிழர் பிரச்னை இன்று அகதிகள்பிரச்னையில் பிரதிபலிக்கின்றது.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மிக அன்னி யோன்யமாக வாழ்ந்துவந்த வர்கள்; இன்றும் வாழ விரும்புகின்றனர்; அதற்கு யமனுக வந்ததே இந்த வடபகுதிபயங்கரவாதமும், தென்பகுதி தீவிரவாதமும்; இதுவே இன்றைய நிலையின் தாற்பரியம் என்பது அரசின் வாதம்.

இதன் முரண்பாட்டை உணரமுடியாத மக்கள் இன்றைய கொடுமை களுக்கு பெரும் பொறுப் பேற்கவேண்டிய ஆட்சிக் குப் பலமளிக்கின்றவர்கள். இரு இனத்தவர்களின் வேறுபாட்டை விளங்கின வர்களே மாறுபாட்டை நீக்கவல்லவர்.

எங்கே முரண்பாடு? தென் னிலங்கை சிங்கள தீவிர வாதிகளும் வடஇலங்கை பயங்கரவாதிகளும் ஒன்று பட்டு நடத்தும் நாடகம் தமிழரை ஒதுக்கி ஒழித்து விடல்? என்ன மடமை! இவ்வித விவேகமற்ற பிர சாரத்தை செய்பவர்களும் அதில் எடுபடுபவர்களும் மிகுந்துவிட்டால் நாடு உய் யும் வழி ஏது? பருவ மழை இறங்கத் தயங்குவதில் என்ன வியப்பு?

எனவே இவ்வித பித்த லாட்டப் பிரசாரத்தை இங்கு செய்தாலும் இதனை உலக நாடுகளில் பரப்பி இதனை ஒழிக்க ஆதரவு தேடு வது மக்கள் அனைவருக்கும் நாடு முழுவதற்கும் அபா யம். வல்லரசுகள் தங்கள் ஆதிக்கம் கருதி தலையிடு வதே அந்த அபாயம்.

பாதுகாப்பற்று உயிரை, உடைமையை, உரிமையை பெருமளவிற் பறிகொடுத்த மக்களின் தலைவர்கள் ஆற் ருக்கொடுமையால் அமைதி விரும்பும் நட்பு நாடுகளை நாடுவது தேசத்துரோகமா?

இருபகுதியினரும் ஒத்துக் கொண்ட நடுநிலைமைவகிக் கும் எந்த நட்பு நாடும் இன்றைய நெருக்கடியைத் தீர்க்க முன்வருவது வேறு விடயம்.

பிரிட்டனுக்கு இந்திரா விடுத்த கோரிக்கை இத் தகையதென நம்பலாம்.

## காந்தி சிலை அன்பளிப்பு

(சாவகச்சேரி)

மகாத்மாகாந்தியின் 114வது ஜயந்தி தினத்தன்று தொழில திபர் திரு க.கனகராசா பெரிய அளவிலான காந்தி சிலையினைக் கைதடி அகதிகள் முகாம் காரி யாலயத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இச் சிலைக்கு இந்தியபனைவள நிபுணர் திரு கே.சம்பந்தம் மலர் மாலை சூட்டினுர்.

(அ)

## சைவசித்தாந்த களஞ்சியம்: ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்தக் களஞ்சியம் ஒன்றை உருவாக்குதல்தொடர் பான ஆலோசனைகளை மேற் கொள்வதற்காக எதிர்வரும் 16ந் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சிவன் கோவில் மண்டபத்தில் பேரா சிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு சமுகமளி த்துஆலோசனைகளை நல்குமாறு பேரறிஞர்களும், அபிமானிக ளும் கேட்கப்பட்டுள்ளனர்.

## தொண்டர் சேவை

(வேலணை)

யாழ். மாவட்ட இந்து இளை ஞர்பேரவையினர் கடந்தசனிக் கிழமை தொடக்கம் யாழ். வண்ணை வெங்கடேச வரதரா ஜப் பெருமாள் கோவில் உற்ச வகாலங்களில் தொண்டர் சேவை செய்து வருகின்றனர்.

இத் தொண்டர் சேவை குறி ப்பாக முக்கிய தினங்களான இம் மாதம் 8ம், 15ம் திகதிக ளில் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை இடம்பெறும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள பல இந்து இளைஞர் மன்றங்க ளின்பிரதிநிதிகளும் இச்சேவை யில் சலந்து கொள்கின்றனர்

[அ]

## அழிவின் விளிம்பில் தெங்கு பனம் பொருள். கூ. சங்கங்கள்

(புலோலி)

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் எதிர் காலம் தெளிவற்றதாகவே இருக்கின்றது. இவ்வேளையில் நாம் தெளிவாகச் சிந்தித்துச் செயற்படாதுவிட்டால் எமது வருங்காலச் சந்ததியினர் எம் மைப் பொறுப்பற்றவர்கள் எனக் கருதவேண்டிய நிலை ஏற் படும். எமது சங்கங்களை நம்பி வாழும் பல்லாயிரக் கணக்கானக்கனவர்களுக்கு நாம் சிறந்த தொழில் வழி காட்டலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.''

இவ்வாறு இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவரும், வடமாகாண தெங்கு பனம் பொருள் உற் பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜச் செய லாளருமான திரு. க. நட ராசா சமாஜ வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''சில சங்கங்கள் இன்று அழிவின் விளிம்பில் நிற்கின் றன. ஆரம்பத்தில் இருந்த ஊழியர்களின் தொகை அரை வாசியாகவும், கள் விற்பனை கால்வாசியாகவும் குறைந்து விட்டது. இத்தகைய நிலையில் உள்ள சங்கங்களை உடனடி யாக நாம் புனரமைப்புச் செய்யவேண்டும்- திட்டமிட்ட படி அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து ஒவ்வொரு தெங்கு பனம் பொருள் கூட்டு றவுச் சங்கமும் ஓரிரு தொழிற் சாலைகளையாவது ஆரம்பிக்க வேண்டும்.

இச்சங்கங்களின் தலைவர் கள், நெறியாளர்கள், முகாமை யாளர்கள் தங்கள் சங்கங் களுக்குரிய அபிவிருத்திப் பணி களைத் திட்டமிட்டே செயற் படுத்தவேண்டும் பாரபட்சம் அற்ற நிர்வாகத்தை நாம் நடத் முயசிக்கச் சங்கற்பம் பூணவேண்டும். எமது சமா ஜம் மேற்கொண்ட தீர்க்க தரிசனமான நடவடிக்கைகள் காரணமாகக் கடந்த வருடம் பத்து வீத விற்பனை வரி அதிகரிப்பில் இருந்து எமது சங்கங்கள் தம்பிக்கொண்டன.

இவ்வரி குறைக்கப்பட்டதின் காரணமாகவே இன்று வங்கியில் சங்கங்களின் நிரந் தர வைப்பில் சிறுதொகைப் பணம் அங்கத்தவர்களின் கட் டாய சேமிப்பாக உள்ளது. வரிகூட்டப்பட்டால் சங்கங் களை எவ்வாறு காப்பாற்றுவது போதிய வருவாயை எப்படி ஈட்டிக்கொடுப்பது என்பது பற்றி நாம் பெரிதும் சிந்தித்து வருவதுடன் இதற்கான மாற் றுத்திட்டம் ஒன்றையும் முன் வைக்கவேண்டியுள்ளது.

## போத்தலில் கள் அடைக்கும் 5 தொழிற்சாலை

ஜனவரியில் இருந்து கள் போத்தலில் அடைக்கும் ஐந்து தொழிற்சாலைகள் இயங்க உள் ளன. கடந்த பெப்ரவரி உலக உணவு நிறுவனமும் பனை அபி விருத்திச் சபையும் இணைந்து நடாத்திய பனைவளத்தொழிற் பாடு மகாநாடு காரணமாக உலக உணவு விவசாய நிறுவ னம் 60 லட்சம் ரூபாவை வழங்கவுள்ளது. இப்பணத்தில் கணிசமான அளவு தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங் கங்கள்பயன்பெறக்கூடியவகை யில் திட்டமிட்டுச்செயற்படுத் தப்படும்.

இவ்வருடாந்தப் பொதுக் கூட்டம் சமாஜத்தலைவர் திரு சு. நடேசு தலைமையில் நடை பெற்றது. யாழ். கூட்டுறவு ஆக்க [பனம்பொருள்] உதவி ஆணையாளர்திரு. எஸ். வேலா யுதபிள்ளை பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்டார். இச்சமாஜத்தின் புதிய தலைவ ராகத் திரு. தி. அமிர்தநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

## ஊர்காவற்றுறை பகுதி அகதிகள் அரச அதிபருக்கு புகார்

மேற்படி தலைப்பின்கீழ் தங் கள் பத்திரிகை 3ம பக்கத்தில் 1-10-83 அன்று பிரசுரித்துள்ள செய்தியின் பொருளடக்கம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாக உள்ளது.

''ஊர்காவற்றுறையைச்சேர் ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் தடவை மட்டுமே பங் கீட்டுப் பொருட்கள் இது வரை வழங்கப்பட்டுள்ளது'' என்று கூறுவது முற்றிலும் தவருனது. எமது பகுதி யில் இரண்டாவது தட வையாக பங்கீட்டுப் பொருட் கள் 23-9-1983 ல் எமது நேர டிக் கண்காணிப்பில் விநியோ கம் நடைபெற்றது ஒரு வார மும் கழிந்தபின் ''முதல் தடவை மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது'' என்று கூறுவது சரியல்ல. மேல் அதி காரிகளின் பணிப்பின்பேரில் பாதிக்கப்பட்டவர்களின் விண் ணப்பங்கள் மீளாய்வு செய் யப்படுவதாலேயே 3-வது தடவை விநியோகம் தாமதப் படுகின்றது. வேறு பகுதிக ளில் வழங்கப்பட்டது போன்று பால்மாவும், உடுதுணிகளும் இப்பகுதியில் விநியோகிக்கப் படவில்லை. இவைகளை இப் பகுதியிலும் வழங்கும்படி யாழ். அரசாங்க அதிபரையும் மற்றும் சமூக சேவையில் இணைந்த தலைவர்களையும்கோரி யுள்ளோம்.

மேற்படி செய்தியில் குறிப் பிடப்பட்டுள்ள புகார் கடிதத் தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், உத்தியோ கத்தர்கள், ஊர்காவற்றுறை நகரப்பகுதி கிராம சேவையா ளர் ஆகியோர்மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் யாவும் உண்மைக்குப் புறம் பானவை, உண்மையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் சிர மத்தைப் பொருட்படுத்தா மல் இரவு பகலாக கடமை யாற்றிவரும் அதிகாரியையும். உத்தியோகத்தர்களையும் கிராம சேவையாளரையும் புண்படுத்தும் வகையில் அமை ந்துள்ளது. கிராமோதய சபை தலைவர் என்றவகையில் இவ்விடயத்தில் கிராம சேவையாளருடன் இணைந்து சேவையாற்றுவதாலும் உதவி அதிபர் பணிமனைக்கு அடிக் கடி சென்று அங்குள்ள நடை முறைகளை அவதானிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாலும் இப்புகார்களை மறுத்துரைத்து உண்மை நிலையை விளக்க வேண்டிய கடப்பாடுடைய வனுகிறேன்.

ஹீ. ச. யேம்ஸ்,
தலைவர்.

ஊர்காவற்றுறை,
கிராமோதயசபை.

★

## மக்கள் கருத்து

## சபாஷ்!

இலங்கையில், அதாவது இந்தநாட்டில் அகதிகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்ருர் கள் என வெளிநாட்டுப்பிர முகர் ஒருவர் சிறந்தபாராட் டைத் தெரிவித்துள்ளதாக ஒருமுறைக்கு இருமுறை இலங் கைவானெலி கூறிக்கொண்டு பெருமைப்பட்டுக்கொண்டது.

இலங்கையிலுள்ள ஒருவர் சமாதானத்துக்கு நோபல் பரிசு பெற்றிருந்தால் கூட இவ்வளவுதூரம் பெருமிதம் ஏற்பட்டிருக்காது போலிருக் கின்றது.

வீட்டில்அமைதியாக இருக்க வேண்டிய இந்த நாட்டுப் பிரஜை வீட்டிலிருந்து விரட் டப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டு வெறுங்கையோடு அகதியாக அடைபட்டுக்கிடக்கின்ருன். அவனது பராமரிப்பு சிறப் பாக இருக்கிறது என்றுவெளி நாட்டு சேர்ட்டிபிக்கட்கிடைக் கிறது போதாதா நாம் பெரு மைப்பட்டுக்கொள்ள?

பலாத்காரக்குடியேற்றக் காரர்களுக்கு படைகளின் பாதுகாப்பு, சொந்தவீடுகளு க்கு திருப்பிச்செல்ல விருப்பு பவர்களுக்கு பாதுகாப்பில்லை. இவர்கள் தான்இந்தஅகதிகள்.

பாதுகாப்பற்றநிலையில் வீட் டைவிட்டுச் சென்றவர்கள் இன்று 'அகதிகள்' என்ற மிக்க பரிதாபப்பெயரோடு, ஏக்கத்தோடு முகாம்களில் தமது வாழ்நாளின் ஒருபகுதி யைக் சழித்துக்கொண்டிருக் கின்ருர்கள் என்பதை வெளி நாட்டுக்காரர்கள் நன்கு உணர் ந்து கொண்டால் போதும்.

பட்டினிக்கான பரிசுநமக்குக் கிடைத்தால்கூட அதையிட்டு நாம் பெருமிதம் கொள்ளத் தயாராக இருப்போம்போலி ருக்கிறது.

- கணேஷ்.

## இந்தியா செல்ல இவர்கள் விருப்பம

(சாவகச்சேரி)

கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை கைதடி அகதிகள் முகா முக்கு விஜயம் செய்திருந்த யாழ். மாவட்ட அரசாங்க அதி பரை நுவரேலியாவிலிருந்து அகதிகளாக இங்குவந்த சுமார் 25 குடும்பங்களின் அங்கத்த வர்கள்சந்தித்து தாம் மிகவிரை வில் இந்தியா சென்று குடியேற விருப்பம் கொண்டுள்ளதாகவும் இதுவிஷயத்தில் தமக்கு ஆவன செய்து தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

இது தொடர்பாக தான் உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வதாக அரச அதிபர் தெரிவித்தார். (அ)

### வெளிநாட்டுத் தலைவர்களுக்கு என்றுமே கொடுக்கப்படாத அளவுக்கு

# தமிழகத்தில் அமிருக்கு கிடைத்த பெரும் மதிப்பு!

இலங்கைத் தமிழர்களுக்காகத் தமது பதவிகளைத் துச்சமென மதிதது்த் தூக்கி எறிந்திருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதியும், பேராசிரியர் அன்பழகனும்!

தியாக வேள்வியொன்றில் கலைஞரும் பேராசிரியரும் குதித்திருக்கிறார்கள் என்று கூடச் சொல்லலாம்!

காலா காலமாக வகித்து வந்த பதவியை உதறித் தள்ளியிருக்கிறார்கள்!

இது ஒரு அரசியல் 'ஸ்ரண்ட்' என்று மாற்றுக் கட்சிகள் வர்ணித்தன!

## 25 வருட அக்கறை

ஆனால், உண்மையோடு, உணர்வோடு இலங்கைத் தமிழர்களுக்காகத் தங்கள் பதவிகளைத் துறந்தவர்கள் இவர்கள் என்பதனை ஏற்றுக்சொள்ளும் அளவுக்கு அவர்கள் சுயநலமற்றுச் செயல்பட்டார்கள்!

இலங்கைத் தமிழர் பிரச்னையில் இருபத்தைந்து ஆண்டு காலமாகத் தனி ஆர்வத்தையும். அக்கறையையும் தி. மு. கழகம் காட்டிவருகிறது!

1961ம் ஆண்டு இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து மிக நீண்ட அறிக்கையை ஒரு தந்தியாக ஐ. நா. சபைக்கு அண்ணா அனுப்பினார்!

பதவியைத் துறந்தபோது கலைஞர் ஒரு அறிக்கையை விடுத்தார்:

''தேர்தலை மனதில்வைத்து நாங்கள் இலங்கைத் தமிழர் பிரச்னையில் ஈடுபடவில்லை: நாளைக்கே இந்தியப் படையை அனுப்பி தமிழர் உரிமையைப் பெற்றுத்தந்தால் நாங்கள் பத்தாண்டு காலம் தேர்தலில் போட்டியிடமாட்டோம்.

''அரசியல் லாபத்துக்காகத் தி. மு. கழகம் இலங்கைப் பிரச்னையில் ஈடுபடவில்லை. எங்கள் இனம் இலங்கையில் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்திரா அம்மையார் இதைஉணர்ந்துகொள்ளவேண்டும்!

''தமிழகத்தை இந்திராகாங்கிரஸ் வேண்டுமானால் ஆளட்டும் எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை! எங்களுக்குத் தமிழினம் வாழவேண்டுமென்பதுதான்! அதற்குச் செயல் வடிவமான பதிலைத் தமிழகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது!

## தீர்க்கதரிசனம்

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்—

1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி—

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்துத் தெளிவான ஒரு தலையங்கத்தைத் தமிழகத் தினசரியொன்று எழுதியது!

இந்தத் தலையங்கத்தைப் படித்தபோது—

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்றதாக இருப்பதனை உணர முடிந்தது!

தலையங்கத்தின் ஒரு பகுதி:

''இலங்கைத் தமிழர் நிர்க்கதியான ஒரு இடுக்கண் நிலையில் விடப்பட்டுள்ளனர். அரசின் கொடுவாள் அவர்கள் கழுத்தை நெருக்கிக் கொண்டிருக்கிறது. தமிழர் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் கைதுசெய்யப்பட்டுவிட்டார். இன்று தேயிலைத் தோட்டங்களில் வசிக்கும் லட்சோப லட்சம் மக்களும் கொதிப்புணர்ச்சிகொள்ளச செய்யப்பட்டுவிட்டதனால், இலங்கையில் இனி நடக்கவிருக்கும் பயங்க நிலைக்கு அரசுதான் பொறுப்பேற்கவேண்டுமென்பதை இப்போதே நாம் எச்சரிக்கிறோம்.

## 22 ஆண்டுகளுக்கு முன் 'விடுதலை'யின் தீர்க்கதரிசனப் பார்வை

''இந்நிலையில், இந்தியப் பிரதமர் தமிழர்களின் உரிமை பறிக்கப்படுவதைக் கண்டு வாளாவிருக்கலாமா? உடனே இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கையைச் செய்வதும், காங்கோவுக்கு அனுப்பியதுபோல் இந்திய ராணுவத்தைத் தமிழர்களின் உயிர்காக்க இலங்கையில் இறங்கச்செய்யவேண்டியதும் அவசியமெனப் பிரதமருக்கு வற்புறுத்துகிறோம்.''

—இது ஒரு தீர்க்கதரிசனப் பார்வையல்லவா?

## கவிதைகள்

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'உண்மை' என்ற மாதமிருமுறைச் சஞ்சிகையில் இலங்கைக் கலவர காலத்தில் வெளியான இதழில் 'சில நாட்களாக' என்ற புதுக் கவிதையொன்றினை 'விக்கிரமாதித்தியன்' என்பவர் எழுதியிருந்தார்.

**தொகுத்துத் தருபவர்: ஈ. கே. ஆர்.**

அப்போது நமது இலங்கை வானொலி நிகழ்ச்சி எப்படியிருந்தது என்பதனை அக்கவிதையில் தீட்டியிருந்தார்.

அந்தக் கவிதை:

சில நாட்களாக<br>
சிலோன் ரேடியோ<br>
பக்திப் பாடல்களை<br>
ஒலிபரப்புகிறது!<br>
பக்தி<br>
முற்றிப் போய் அல்ல!<br>
பாடுகளைப்<br>
பரிதாபங்களைப்<br>
பக்திப் போர்வையில்<br>
மூடி வைக்கத்தான்!<br>
ஊர் தீப்பிடித்து<br>
எரியும் போது<br>
உல்லாசப் பாடல்களை<br>
எப்படி ஒலிபரப்புவதாம்?<br>
வெட்கையை<br>
வேதனையை<br>
வேத கீதங்களாய்<br>
மாற்றி விடுவதாம்!<br>
''மதம்<br>
மக்களுக்கு அபினி'' என்ற<br>
மார்க்ஸின்<br>
கண்டுபிடிப்பு<br>
உண்மையாகிறது!<br>
'நீங்கள் கேட்டவை'<br>
'நேயர் விருப்பம்'<br>
'இரவின் மடியில்'<br>
எல்லாம்<br>
நிறுத்தப்பட்டு<br>
இறைவன்<br>
பாடல்களென்று<br>
ஒலிபரப்புவது<br>
எதுக்கு?<br>
பக்திப் பாடல்களால்,<br>
படுகொலைகளை<br>
மறைத்துவிட<br>
முடியுமா?<br>
எல்லா<br>
வினைகளுக்கும்<br>
எதிர் வினைகள்<br>
உண்டென்பது<br>
இயற்கை நியதி<br>
வல்லான் வகுத்ததே<br>
விதியென்ற<br>
வரலாற்றைத்<br>
திருத்தியெழுதுவோம்!<br>
வாருங்கள்!

தமிழக முதல்வர் எம். ஜி. ஆரின் வார இதழ் தாய்; நல்ல இலக்கிய ஏடு. தமிழறிஞர் வலம்புரி ஜான் ஆசிரியராக இருக்கிறார். கவிஞர் புலமைப் பித்தனின் இலங்கைத் தமிழர் பற்றிய கவிதையொன்றுவெளியிடப்பட்டுள்ளது. கவிதையின் சில பகுதிகள்:

## தமிழகத்தின் இதயக் குமுறல் - 10

யாழ் நகர<br>
வீதியிலே<br>
சோக இசை<br>
கேட்குதடா<br>
சோக இசை<br>
ஓர் நொடியில்<br>
வீர இசை<br>
ஆகுமடா!<br>
ஈழ மண்ணின்<br>
ஈரத்திலே<br>
வீர விதை<br>
வீழ்ந்ததனால்<br>
விடுதலையும்<br>
தோன்றுமடா!

## கவிஞர்களின் கண்டனக் குரல்

''இப்போதுள்ள இலங்கை மண் கடல் கொண்ட பழந் தமிழகத்தின் ஒரு பகுதியாகும். அந்த நாடு தமிழர்களுக்கே உரியது'' — என்ற ஒரு புதிய கருத்தை முன் வைத்தவர் கவிஞர் பொன்னடியான்.

தமிழ்க் கவிஞர் மன்றத்தினர் மெரினாக் கடற்கரையில் கூடிக் கவியரங்கமும், இலங்

## தியாக வேள்வியில் கலைஞரும் பேராசிரியரும்!

கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்துக் கருத்தரங்கமும் நடாத்தினார்கள்.

இந்த விழாவுக்கு திருக்குறள் முனுசாமி தலைமை தாங்கினார். பொன்னடியான் தெரிவித்த கருத்துக்கள்:

''ஈவிரக்கமற்ற கொலைவெறிக்குத் தமிழர்கள் ஒருநாள் பாடம் புகட்டியே தீருவார்கள். தமிழன் தன் உரிமை பெறுவதற்கு சிங்களவர் வழி காட்டிவிட்டனர்! வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையுடன் தமிழர் ஒன்று படவேண்டும்!''

வலம்புரி ஜான் சொன்னார்:

''மனித நாகரீகம் கண்டிராதஇனப்படுகொலையே இங்கு இருக்கும் தமிழர்களை ஒன்றுபடுத்த இயலாவிட்டால், இந்த இனம் வேரறுந்து சாவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது? தங்கள் இனவிடுதலைக்காகத் துப்பாக்கி ஏந்தவும் துணிந்தவர்கள் தமிழர்கள் என்பதை உலகம் இப்போது கண்டுகொண்டது.

''இலங்கை சென்ற முதல் தூதுவர் அனுமான். அவன் அவமானப்படுத்தப்பட்டதால், இலங்கைக்கு நெருப்பு வைத்தான். ஆனால் இன்று தூது போன நரசிம்மராவ் நெருப்பையல்லவா பார்த்துவிட்டு வந்திருக்கிறார்.

நாடறிந்த கவிஞர்கள் புலமைப்பித்தன், காமராசன், மு. மேத்தா உணர்ச்சிக் கவிதைகளைப் பாடினார்கள்!

## அமிரைப் பார்க்கப் போட்டாபோட்டி

இதுவரை எந்த ஒரு வெளிநாட்டுத் தலைவருக்கும் இல்லாத மிகப்பெரிய மதிப்பு தமிழகத்தில் அமிர்தலிங்கத்துக்கு இருந்தது!

தமிழகத் தலைவர்கள் முண்டியடித்துக்கொண்டு அமிர்தலிங்கத்தைச் சென்று பார்த்துப் பேசினார்கள்! பத்திரிகை நிருபர்கள் போட்டா போட்டி போட்டுக்கொண்டு அமிரைச் சந்தித்துப் பேட்டி கண்டார்கள். அவரது பேட்டியைப் போடுவதன் மூலம் பத்திரிகைக்கு மேலும் மதிப்பைத் தேடமுயன்றார்கள்!

(8-ம் பக்கம் பார்க்க)


உண்ண உண்ண சுவை தரும் சோறும் கறியும் தருவது அஜி-நொ-மோட்டோ!

உங்கள் சோறு கறி உணவு ஆவலைத் தூண்டும் அற்புத ருசி கொண்டதாக மாற அஜி-நொ-மோட்டோவின் துணையை நாடுங்கள். சோறு, கறி, சம்பல், பொரியல் எதுவானாலும் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள். கரும்பு, பீட்றூட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி-நொ-மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.




சந்தைப்படுத்துவோர்:
கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு
விலை: ரூ.1/20ல் இருந்து

அஜி-நொ-மோட்டோ®
உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Minds/AJM 0008

தவறுணைகளை அழிக்கும் முயற்சி

# 5 லட்சம் மக்களையும் படுகொலை செய்வதற்கு ஒப்பாகும்

## சமூக ஜனநாயக இயக்கம் கண்டனம்

(புலோலி)

''தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களினுல் அரசாங்கத்திற்குப் பெருந் தொகையான பணம் வரியாகச் செல்கின்றதென்பது உண்மை. எனவே, இதற்கு எமது மக்களின் கள் உற்பத்தியின் மீதான பெரும் வரிப் பளுவைக் குறைக்கவேண்டுமெனக் கோருவதே நியாயமானது. இதற்கான ஒரு போராட்டத்தை முன் வைத்தால் எமது பூரண ஒத்துழைப்பும் கிடைக்கும். ஆனுல் எமது மக்கள் தமது உயிரைப் பணயம்வைத்துத் தமது சீவனுேபாயத்தைத் தேடும் ஒரேயொரு வருவாய் மூலத்தை அழிக்க முயற்சிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது''

இவ்வாறு சமூக ஜனநாயக இயக்கம் (முன்ஞள் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி) விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''இலங்கையின் வடபகுதியிலுள்ள தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் கள் விற்பனையை நிறுத்தி, அச்சங்கங்களைக் கலைத்துவிடுமாறு கோரும் தோரணையில் பிரசுரங்களும், செய்திகளும் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

இச்சங்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையேயுள்ள சாதியமைப்பினுலும், தீண்டாமையினுலும் ஆயிரக்கணக்கான வருடங்களாக நசுக்கப்படுகின்ற, மனித உரிமை மறுக்கப்பட்ட தமிழ் மக்களது வாழ்வுக்கும், நலனுக்கும் எதிரான நடவடிக்கையானபடியினுல் எமது மக்களிடையே பெரும் பீதியும் பதற்றமும் தோன்றியுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரிகள் பெரும்தேசிய இன வெறியர்களும் அவர்களுக்குத் துணைபோகும் அரசியல் சமுதாய அமைப்புக்களுமேயாகும்.

எமது மக்களின் சீவனுேபாயத் தொழிலைச் சுதந்திரயாகச் செய்யவிடாது தடை செய்ய முயற்சிப்பது எமது ஐந்து லட்சம் மக்களையும் படுகொலைசெய்வதற்கான ஒரு முயற்சியாகும்.

தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களினுல் அரசாங்கத்திற்குப் பெருந்தொகைப் பணம் வரியாகச் செல்கின்றதென்ருல், தமிழ்ப் பிரதேசத்திலிருந்து இலட்சக்கணக்கில் வரிப் பணங்கள் வேறு நிறுவனங்களூடாகவும், தொழிற்துறைசளூடாகவும் அரசாங்கத்திற்குச் செல்வதை மறந்ததேன்? இவற்றையெல்லாம் விடுத்து மனித உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுயன்ற காரணமென்ன?

வடபகுதி தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை நோக்கி எமது மக்களை வீறு நடைபோட அமைக்கப்பட்ட அத்திவாரங்களாகும். அவற்றை அமைக்கும் காலகட்டத்தில் எந்தத் தமிழ்த் தலைவர்களும் ஆதரவு கொடுக்கவில்லை. என்ருலும் நாங்கள் தமிழர்கள் என்ற உணர்விற்கு யாரும் சவால்விட முடியாது. எனவே, தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கொண்டு எமது மக்களுக்கு விரோதமான செயற்பாட்டை நிறுத்தும்படி கேட்டுக்கொள்கிருேம்.''


வீடியோ பட ரசிகர்களுக்கோர் நற்செய்தி !

**தமிழர் நிதியம்** நிதி நிறுவனத்தின்

**வீடியோ கழகம்**



**5-10-83** முதல்

தமது சேவையை ஆரம்பிக்கிறது.

சிறந்த ரக தொலைக்காட்சிப்பெட்டி, வீடியோ டெக், வீடியோ கசெற் ஆகியவற்றை கழக அங்கத்தவர்களுக்கு சலுகை அடிப்படையில் வழங்க உள்ளார்கள் !

- ரூபா 500/- செலுத்தி வீடியோ கழக அங்கத்தவர் ஆவதன் மூலம் ரீ. வி. டெக் மற்றும் தமிழ்/ஆங்கில மொழிகளில் சிறுவர்களுக்கும்,வயது வந்தவர்களுக்கும் ஏற்ற புராண, சமூக,சரித்திர, காதல் திரைப்படங்களைக் காட்சிக்காகப் பெற்றுக் கொள்ள முடியும்.
- தமிழர் நிதியத்தில் ரூபா 500/-க்கு மேல் வைப்பிலிட்டவர்களுக்கு எவ்வித மேலதிகக் கட்டணமுமின்றி அங்கத்துவ உரிமை வி சட சலுகையாக வழங்கப்படும்.
- புத்தம் புதிய தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ டெக், வானெலி மற்றும் ஒலி/ஒளி சாதனங்களை எமது காட்சியறையில் பார்வையிட்டு குறைந்த விலையிலும் தவணைப்பணமுறையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

"தங்கச் சுரங்கம்" அதிர்ஷ்ட முதலீட்டுத்திட்டம்

01-10-83 இல் நடைபெற்ற பரிசிழுப்பில் பரிசு பெற்றேர்

| | | இலக்கம் |
|---|---|---|
| (1) | திருமதி சிவரத்னகௌரி பிருதிவிராஜ்<br>*204, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* | 000431 |
| (2) | செல்வி தனேஸ்வரி குமாரசாமி<br>*9, புதிய குடியேற்றத் திட்டம், மாங்குளம்.* | 000663 |

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனேகரா சினிமா அண்மையில்)

தொலைபேசி: 22437


## வவனியாச் செய்திகள்

ரி. விவேகராசா

யாழ் குடாநாட்டுப் பொருட்கள் வன்னியில் விற்பனைக்காக சந்தைக்கு வருகின்றது. முந்திரிகைப்பழம், பனங்குட்டான், ஒடியல், புகையிலை, ராசவெள்ளிக்கிழங்கு போன்ற யாழ் குடாநாட்டுப் பொருள்கள் சந்தைத் தினங்களில் வவனியா வருகின்றது.

கிளிநொச்சியில் தற்போது சந்தை இல்லாதபடியினுல் வவனியாவிலேயே சந்தை கூடுகின்றது.

கடந்த வாரம் கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து பெருமளவு வாழைக்குலைகள் சந்தைக்கு வந்திருந்தன.

### வாகன நெருக்கடி

சந்தைத் தினங்களில் வவனியாவில் வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வவனியாவில் சனி, புதன் கிழமை இரு தினங்களும் சந்தைத் தினங்கள்.

குறித்த நாட்களில் பெருமளவு வெளியூர் வியாபாரிகள் உற்பத்திப் பொருள்களை வாங்கவும் விற்கவும் வவனியா வருகின்றனர். இந்த நாளில் பெருமளவு வாகனங்களும் நகருக்கு வருகின்றன. இதனுல் நகரில் வாகன நெருக்கடி ஏற்படுகின்றது.

போக்குவரத்துக்கள் தடைப்படுகின்றன. வவனியா நகர் வீதிகள் குறுகியனவாக இருப்பதினுல்தான் வாகன நெருக்கடி ஏற்படுகின்றது.

அதேவேளையில்பொருள்களை ஏற்றுவதற்காக பெருமளவு வாகனங்கள் வீதிகளில் தரித்து நிற்பதினுலும் வாகன நெருக்கடி ஏற்படுகின்றது.

### செஞ்சிலுவைச்சங்கம் அன்பளிப்பு

வவனியா அகதிகளுக்கு வெளிநாட்டுச் செஞ்சிலுவை சங்கம் உடுபுடவைகளை அன்பளிப்பு செய்துள்ளது.

ஓமந்தை, பெரியகட்டு இரு இடங்களிலுமுள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு உடு பிடவைகள் அன்பளிப்புசெய்யப்பட்டது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 500 ரூபா பெறுமதியான புடவை பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

வெளிநாட்டு செஞ்சிலுவை சங்கத்தின் அன்பளிப்புக்களே இவையாகும். இங்குள்ள செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி முகாம்களுக்கு நேரில் விஜயம் செய்து குறித்த அன்பளிப்புக்களை வழங்கினுர்.

### தட்டுப்பாடு

வவனியாவில் எரிபொருளுக்கு மீண்டும் தட்டுப்பாடு நிலவுகின்றது. கியூவில் நின்று வாகனங்கள் எரிபொருள்களை பெறுகின்றன.

டீசலுக்கே பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது அனுராதபுரத்திலிருந்து எரிபொருள்கள் இங்கு பவுசர் மூலம் வரவழைக்கப்பட்ட போதிலும், தட்டுப்பாடு நிலவுகின்றது. வடபகுதிக்கு செல்லும் அநேகமான வாகனங்கள் வவனியா வந்தே செல்லுகின்றன. இதனுல் இங்கேயேதான் எரிபொருள்களை வாகனங்கள் பெற்றுச்செல்கின்றன. இதனுலேயே எரிபொருள்கள் மிக விரைவில் முடிந்துவிகின்றது.

### க. பொ. த. உயர் பரீட்சை

வவனியாவில் இம்முறை நான்கு பாடசாலைகளில் க. பொ. த உயர்தரப் பரீட்சை நிலையங்கள் இயங்குகின்றது

தமிழ் மகாவித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம், சைவப்பிரகாசவித்தியாசாலை, காமினி சிங்கள வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே பரீட்சைநிலையங்களாக உள்ளன.

பரீட்சை நிலையங்களில் ஆயுதம் தாங்கிய இரு பொலிசார் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். பரீட்சை வினுத்தாள்கள் வவனியா பொலீஸ் நிலையத்திலிருந்து பொலீஸ் காவலுடன் எடுத்துச் செல்லப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்படுகின்றது.

விடைத்தாள்களும் காவலுடன் எடுத்துவரப்பட்டுக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரியிம்ட ஒப்படைக்கப்படுகின்றது. இம்முறை பெருமளவு வெளியூர் பரீட்சார்த்திகள் காணப்படவில்லை. முன்பெல்லாம் வெளியூர் பரீட்சார்த்திகள் பெருமளவு இங்குவந்து பரீட்சை எழுதினுர்கள்.

பரு. ஹாட்லி கல்லூரிக்கு

## பிரிட்டனில் வசிக்கும் பழைய மாணவர் உதவி

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் தளபாடப்பற்ருக்குறை, கட்டிடப் பற்ருக்குறை விஞ்ஞானஆய்வுகூட உபகரண பற்ருக்குறை என்பனவற்றை நீக்குவதற்கு உதவிகள் வழங்குவதென பிரிட்டன் ஹாட்லி பழைய மாணவர்சங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் பிரிட்டனில் நடைபெற்ற மெதடிஸ்த திருச்சபை மகாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக இலங்கை மெதடிஸ்த திருச்சபையிலிருந்து சென்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு டபிள்யூ. என்.எஸ் சாமுவேல் ஒருமாதகாலம் பிரிட்டனில் தங்கியிருந்தார்.

அப்போது அங்கு நடைபெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். பிரிட்டன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் சுமார் 300 பேர் அங்கம் வகிக்கின்றனர். இச்சங்கத்தினர் அதிபர் திரு டபிள்யூ. என்.எஸ். சாமுவேலைக் கௌரவித்து விருந்துபசார மொன்றையும் நடாத்தினர்.

## பொருள்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கில் இயங்கிவரும் திராட்சைக் கொடிக் கத்தரிப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் தமது ஒரு நாள் ஊதியத்தை கைதடி அகதிகள் முகாமிற்கு அன்பளிப்புச் செய்தனர். இந்நிதியைக் கொண்டு அரிசி, மா, சவர்க்காரம், பால்மா வகைகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்து நேரில் சென்று கையளித்தனர்.

ராஜா (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்—அம்பிகா
கவுண்டமணி கதையில்
அந்த 7 நாட்கள்
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
ஸ்ரீதேவி-சரிதா
...
துணை
(கலர்)

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30 6-15
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

சாந்தி யாழ்நகர்
10-30, 2-15, 4-45, 7-00
BURT REY NOLDS
IN A DUAL ROLE
"Sharky's
Machine"
Color Action Filled
—Adults Only—

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
பெரிய இடத்து பெண்
8th to 11th
Sean Connery in
BRIDGE TOO FAR
(War Film)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30 2-00, 4-30, 6-45
Bruce Lee in
ENTER THE
DRAGON
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 5-30, 9-30
விடியும்வரை
காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15
4-45 and 7-00 p.m.
Robert Shaw in
FORCE 10 FROM
NAVARONE
(Action Packed)

மனோகரா
(யாழ்நகர்)
10-30, 2-15, 4-45,
7-00 p.m.
Captain Coronos
VAMPIRE HUNTER
(action film-color)

றீகல் இன்றுமட்டும்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00 மணி
எம்.ஜி.ஆர்.. லதா,
(இரு வேடங்களில்)
மஞ்சுளா, நம்பியார்,
அசோகன்
நேற்று இன்று நாளை
—ஈஸ்ட்மென்கலர்—
From 6-10 83
DOGS OF WAR

லதா (கோண்டாவில்)
தினசரி 2-30, 6-30
சிவாஜி
நடித்த
சரஸ்வதிசபதம்


# "அதிபர் மகேசன் மறைவு வட்டு. மக்களுக்கு பேரிழப்பு"

(யாழ்ப்பாணம்)

''கொழும்பு விவேகானந்தா வித்தியாலய அதிபர் அமரர் மகேசன் ஒருஉத்தம ஆசிரியர். சிறந்த கல்விச் சேவையாளர் ஊக்கமான தொழிற்சங்கவாதி மக்கள் தொண்டன். அவரின் மறைவு ஆசிரிய உலகத்திற்கும், மாணவ உலகிற்கும், வட்டுக்கோட்டை மக்களுக்கும் பேரிழப்பாகும்''

இவ்வாறு அதிபர் மகேசனின் இறுதிச் சடங்குகளன்று நடைபெற்ற இரங்கலுரைக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. என். சிவஞானம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:—''அமரர் மகேசன் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார்'' என்று கூறினார்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் வடபகுதி அமைப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் உரையாற்றுகையில்: ''அமரர் மகேசன் தமது உத்தம நண்பரென்றும், தமது கட்சியின் ஒரு தூண்'' என்றும் கூறினார்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் திரு. த. சங்கரலிங்கம், திரு. வி. அற்புதரத்தினம், முன்னாள் எம்.பி. திரு. எம்.சி. சுப்பிரமணியம், திரு க. வயிரமுத்து, திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம் உட்படப் பலர் அமரர் மகேசனின் சேவைகளைப் பாராட்டி இரங்கலுரையாற்றினார்கள்.

# இன்றைய பலன்

புரட்டாதி 19-ம் திகதி
புதன்கிழமை
(5-10-83)

மேடம்; வேண்டியஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம் அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும் சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டும் சகோதர சஞ்சலமும் உண்டு.

இடபம்: ஒளிமயமான நாள் ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள் உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணைநிற்பர் விருந்தினர் வருகையால் வீடே கலகலப்பாக இருக்கும் பெரியோரைப் பேணவும்.

மிதுனம்: செய்தொழிலில் சிறப்படைய இடமுண்டுபுதிய கண்டுபிடிப்புக்களும் இடம் பெறும் பொறியியலாளர்களுக்கு சிறப்பான தினம் சிலருக்கு அரசினர் விருந்தும் கிடைக்கலாம்.

கடகம்: மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள் தாராள குணத்தின் மூலம் தனமும் சேரும் புண்ணியயாத்திரையும் மேற்கொள்ளப்படலாம்.

சிங்கம்; இன்று எதிலும் நிச்சயமற்ற நிலைமைதென்படும் மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்குப் உணர்ச்சிவசப் படுவதால் வேண்டாத விளைவு உருவாகும் மன அடக்கம்வேண்டும்.

கன்னி: முன்னேற்றம்தடைப் படும் குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம் எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும் அமைதி நன்று.

துலாம்: மேடைப்பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவார்கள் பொருள் வரவுக்கும் இடமுண்டு இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும் முன்னேற்றம் உண்டு

விருச்சிகம்: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும் அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம் எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும்.

தனு: திடீர்த் திருப்பம் நல்ல முடிவை ஏற்படுத்தும் ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றியவை முடிவில் இலகுவாக இருக்கும் இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு புகழ் பரவும் வாகன சுகமுண்டு.

மகரம்: பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும் சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காண முடியும் குடும்பத்தில் தென்றல் வீசும் மகிழ்ச்சிகரமான தினம்.

கும்பம்: கருடப் பார்வை உங்களை வட்டமிடும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள் பிறர் நம்பிக்கையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்: இனிமையான அழைப்பு உங்களுக்குக் கிடைக்கும் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உற்சாகப்படுத்தும் களஸ்திரவழியாலும் கண்ணியம் சேரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த என். யெகராஜா கைம்பெண் பொன்னம்மா என்பவரால் விட்டிறந்த மரண சாதனம் எழுதப்படாத சொத்துகளுக்கு நிர்வாகத்தத்துவம் பெறக் கோரும் மனு சம்பந்தமாக

(மரண மெய்தியவர்)

மரணச்சொத்து } இல 3747/த
நியாயாதிக்கம்

திருமதி இராசம்மா சோமத்திலகம்இல 25 1/ லோறிஸ் வீதி, கொழும்பு-4
மனுதார்

எதிர்

1. திருமதி நல்லம்மா இராசையா கட்டுடை மானிப்பாய்.
2. திருமதி தெளசிகா இன்பராஜ் இல 27 டிபொன் சேகா பிளேஸ் கொழும்பு-4
3. திருமதி திரேயிசேதீஸ்வரன் இல: 11/1 கேப் பிறிட்ஜ் பிளேஸ் கொழும்பு-7

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமில்லாத தத்துவவழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது

அக்கறையுள்ள எவரேனும் 1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற ஆணைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்

1983ம் ஆண்டு ஆடி மாதம் 18ம் திகதி
வரைந்தவர்
சி. இராசேந்திரன்
மனுதாரின் சட்டத்தரணி
2-9-83

காரணம் காட்டும் திகதி 20-10-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தா. குலஞானம்
பதிவாளர்
9089

# போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்து மகாசபை இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில்இம்மாதம் 8ம் திகதி நடாத்தவுள்ள நவசக்தி அர்ச்சனை, நவதுவார தங்கவிமான திருவிழாவை முன்னிடு சமய அறிவுப் போட்டி யொன்றை நடாத்தவுள்ளது. தற்கான விஞத்தாளையும், விண்ணப்பப் பத்திரத்தையும் சபை வெளியிட்டுள்ளது.

பரிசில்கள் 18ம் திகதி இணுவில் சின்னத்தம்பிப்புலவர் அரங்கில் வைத்து வழங்கப்படுமென இந்து மகாசபைச் செயலாளர் திரு தி.சி.சண்முகலிங்கம் தெரிவித்தார். (அ)

## வடகரை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறியதும் கடல் நீரால் வருடா வருடம் அழியும் நெற்பயிர்களுக்குப் பாதுகாப்பும் பொதுமக்களுக்குப் புதிய பாதை வசதியும் கிடைக்கும் போது புங்குடுதீவு மக்களின் வாழ்வு ஒருபடி. முன்னேற்றமடையும் என்பதையாரும் மறுக்கமுடியாது தங்கள் கிராமத்தின் தேவைகளைத் தாங்களே நிறைவேற்ற வேண்டும் என்பதை உணர்ந்து பொதுமக்கள் செயற்படுவது சமூக முன்னேற்றத்திற்குரிய நல்லதொரு அறிகுறியாகும்'' (அ)

# 64-ம் நாள் நினைவஞ்சலி !



கடந்த 29-7-83 முதல், இன்று வரைக்கும் தனது அன்புப் பெற்றோர்களையும், அருமை மனைவி, பிள்ளைகளையும் பாசம் மிக்க சகோதர-சகோதரிகளையும் ஆழ்த்துயரில் ஆழ்த்திவிட்டு, மாயமாய் மறைந்து, மனதுருக வைத்த ''திரு'' என்னும் செல்லப் பெயர் கொண்ட,

## கந்தையா திருநாவுக்கரசுவின் நினைவஞ்சலி!

| பிறப்போதயம்: | மறைவஸ்தமனம்: |
| --- | --- |
| 24-12-1950 | 29-7-83 |

உன் எண்ணிமுடியாப் பிரிவை எண்ணி, எந்நாளும் கண்ணீர் சொரியும்

| பெற்றோர்கள்-சகோதர சகோதரிகள் | மனைவிபிள்ளைகள் |
| --- | --- |
| கொக்குவில் கிழக்கு, | உடுவில், |
| கொக்குவில். | சுன்னுகம். |

9098


# G. C. E. A/L

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்
மாணவர்களே!
(SCHOOL LEAVERS)
நீங்கள் உங்கள் நேரத்தை வீணாக்கத் தேவையில்லை
உங்கள் அபிமான
கன்ரேபியா கல்வி நிலையம்
ஆரம்பிக்கும்
1 மாத கால INTRODUCTORY
வகுப்பில் சேர்ந்து
1984 ஆம் ஆண்டில் நடக்கப்போகும்
ICMA — CHARTERED
IAA — IAB — IDPM
பரீட்சைகளுக்கு உங்களைத் தயார் செய்யுங்கள்!
விரிவுரையாளர்கள்:
Mrs. S. சுந்தரலிங்கம்
Mr. M. நல்லநுவன்
Mr. P. சிவபாதசுந்தரன்
ஆரம்பம்: 17-10-1983
கட்டணம் 50/-
முழு விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.
CANTABIA
INSTITUTE
21, Main Street. Jaffna.
T' PHONE: 24201

## மாங்காய் வாங்க வந்து

# நகை கொள்ளையடித்தனராம் 3 பேர்மீது வழக்கு தாக்கல்

(மாவிட்டபுரம்)

மாங்காய் வாங்கவந்து தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக கைதான 3 சந்தேக நபர்கள் மீதும் கொள்ளைக்குற்றச்சாட்டின் பேரில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த பொன்னம்பலம் செல்லம்மா என்னும் பெண்மணி வீட்டில் தனித்திருந்த சமயம் அங்கு மாங்காய் குத்தகைக்கு வாங்குவதற்காக சைக்கிளில் வந்த நபர்கள் இப்பெண்மணியுடன் பேசிக்கொண்டிருந்து தேனீரும் வாங்கி அருந்திய பின் திடீரென அவரது வாயை பொத்திக்கொண்டு அவரிடமிருந்த 45ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்ட காங்கேசன்துறைப்பொலிசார் செல்லையா பூபாலசிங்கம் (டச்வீதி உடுவில்) சீனித்தம்பி சந்திரலெஸ், தம்பிராசா இராசேந்திரன் (இருவரும் சங்குவேலி) ஆகியோரை கைது செய்திருந்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இந்நபர்கள் மீது மேற்படி பெண்மணியின் 45ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையடித்ததாக குற்றஞ் சாட்டி காங்கேசன்துறைப் பாலிசார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

மேற்படி நபர்கள் தாம் சுற்றவாளிகள் எனக்கூறியதால் நீதிபதி திரு.சீ வி.விக்கினேஸ்வரன் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், 2ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. விஜயேந்திராவும் ஆஜராகினர்.

## வெளிநாட்டுத்---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கலவரத்தின்போது அமிர்தலிங்கம் தமிழகம் சென்றபோது, அவருடன் அங்கு இருந்தவர் என்னிடம் தெரிவித்த தகவல்கள் மட்டுமல்ல,

தமிழகப் பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் படித்தபோது, இந்த உண்மை புலனானது!

இலங்கைச் செய்தி இல்லாத தினசரி, வாரப்பத்திரிகைகள் இல்லை! அமிர் பேட்டி இல்லாத சஞ்சிகைகள் இல்லை!

வெளிநாட்டுத் தலைவர்களுக்கு என்றுமே கொடுக்கப்படாத அளவு பாதுகாப்பும் அமிருக்குத் தமிழக அரசுவழங்கியது!

சேப்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் மாளிகைக்கு அமிர் வந்தபோது, இரகசியப்பொலிசார் தொடர்ந்து வந்தனர்!

விருந்தினர் மாளிகை வாசலிலும், வராந்தாவிலும் துப்பாக்கி ஏந்திய பொலிசார் ஏராளமாக நின்றனர்.

அந்தப்பகுதிக்குள் புதியவர் எவரும் அனுமதிக்கப்படவில்லை!

நிருபர்கள் படையாக வந்தனர்!

தடுத்து நிறுத்தப்பட்டனர்!

பொலிஸ் அதிகாரிகள் ஒவ்வொரு மாடியிலும் ''யார் எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டனர்.

அங்கே, ஐம்பதுக்கு மேற்பட்ட பொலிசார் நின்றனர்!

அமிர்தலிங்கத்தின் அறைக்கு நிருபர்கள் போகுமுன்னர், சோதிக்கப்பட்டனர். உடலைத் தடவிப் பார்த்தார்கள்!

ஒரு பொலிஸ் அதிகாரி நிருபர்களது பெயர் விலாசங்களை எழுதிக்கொண்டார்.

எம். ஜி. ஆரின் உத்தரவின் பேரில், அமிருக்கு இவ்வித பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(இன்னும் வரும்)

## மானிப்பாய் மெமோறியல் அதிபருக்கு இன்று பாராட்டு

(மானிப்பாய்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் திரு. எஸ். சுந்தரதாஸுக்கு இன்று மாலை சேவை நலம் பாராட்டுவிழா நடைபெறுகிறது.

வெளிநாட்டில் கடமையாற்றுவதற்காக செல்லும் இவருக்குப் பாடசாலை அபிவிருத்தி சபையும் பழைய மாணவரும் சேர்ந்து மேற்படி பாடசாலை மண்டபத்தில் இப்பாராட்டு விழாவினை நடத்துகின்றனர்.

குறுகியகாலத்தில் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்கும் வழிவகுத்த திரு. சுந்தரதராசின் இச்சேவை நலம் பாராட்டுவிழா திரு.வி.பொன்னுத்துரை தலைமையில் நடைபெறுகிறது. பலதுறைகளில் பாடசாலை திரு. சுந்தரதாஸ் காலத்தில் வளர்ச்சி பெற்றது.

## இப்படியும் நடக்கிறது

வதந்தியின் வேகம் என்ன?

சுருக்கமாகச் சொல்வதென்றால் 'டி வி.' யிலும் 'சக்தி' வாய்ந்தது எனலாம்.

நேற்று முழுக்க யாழ்ப்பாணத்தில் ஒரு 'கதை' அடிபட்டது. அது, ஒரு அம்மணியின் உத்தியோக பதவியேற்பு வைபவம் சம்பந்தப்பட்டது.

அலசி ஆராய்ந்ததில், வதந்தியில் அப்படி ஒன்றுமே இல்லை.

— ஊடுருவி

## அகதிகள் முகாமில் காந்தி ஜயந்தி

(யாழ்ப்பாணம்)

பண்ணை அகதிகள் முகாமில் காந்தி ஜயந்தி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது விழாவிற்கு திரு. நடராஜா தலைமை வகித்தார். திரு. சபாலிங்கம் செல்வன் ராஜ்குமார் திரு பாலகிருஷ்னன் திருமதி சங்கரவடிவு செல்லையா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தியதோடு எல்லோருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன இறுதியில் ''ஆத்மஜோதி'' திரு நா. முத்தையா கலந்துரையாற்றியது குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர தீர்வுக்கு பிரார்த்தனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து எதிர்காலத்திலும் இவ்வித பாதிப்புகள் ஏற்படாவண்ணம் பாதிப்படைந்தவர்களுக்கான விமோசனத்திற்கு அருள் வேண்டி கொக்குவில் நந்தாவில் அம்பாள் ஆலயத்தில் மக்கள் ஒருங்கிணைந்து தினமும் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தி வருகிறார்கள். இக் கூட்டம் கடந்த மாதம் 27-ம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருகின்றது.

# "கணவருடன் நின்றபோது வெடிச்சத்தம் கேட்டது"

## சின்னவன்மரணவிசாரணை:மனைவிசாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''நானும் கணவரும் ஈவினைச் சந்தியில் கதைத்துக்கொண்டு நின்ற பொழுது ஒரு சைக்கிளில் இருவாலிபர்கள் வந்து கொண்டிருந்தனர் எங்களுக்கு அருகில் வந்ததும் ஒரு வெடிச் சத்தம் கேட்டது. நான்ஓடி 200 யார் தூரம் போனதும் மேலும் ஐந்து வெடிச்சத்தங்கள் கேட்டன. பின்னர் திரும்பிவந்து பார்த்தபொழுது எனது மாமனாரின் ஆட்டுக் கொட்டில் பக்கம் அவர் சுடுபட்டு இறந்துகிடந்தார்''

புன்னாலைக் கட்டுவன் ஈவினையைச்சேர்ந்த சின்னவன் இராமச்சந்திரன் அல்லது ஒற்றைக்கண்ணன் (31 வயது) மரண விசாரணையில் இறந்தவரின் மனைவி சிவராசபதி இராமச்சந்திரன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். மல்லாகம் மாவட்ட நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் ஸ்தலத்தில்வைத்து மரணவிசாரணை நடத்தினார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ராஜலிங்கம்தலைமையில் சார்ஜன்ட் எஸ். துரைசிங்கம், கான்ஸ்டபிள் ஆர். கந்தசாமி ஆகியோர் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இராமச்சந்திரன் என்பவர் நான்கு மாதங்களுக்கு முன்னர் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். இருமாதங்களுக்கு முன்னர் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடியவர்களுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறந்தவரின் மனைவி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது ''காலஞ் சென்றவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் ஈவினையிலுள்ள தமது தகப்பனார் வீட்டுக்குச்சென்று சகோதரர் கிளி என்பவரைக் கூப்பிட்டார் அவர் அப்பொழுது அங்கு இருக்கவில்லை நான் மரக்கறி வாங்கிக் கொண்டு மாமனார் வீட்டுப் பக்கமாக சென்ற பொழுது கணவர் ஈவினைசந்தியில் நின்றார். எப்பொழுது மறியலால் வந்த நீங்கள் என்று கேட்டபோது, ''அதைக் கேட்கவேண்டாம். எனது பிள்ளைகளைப் பார்க்கப்போகிறேன். அவர்கள் எங்கே'' என்று கேட்டார். அந்நேரம் இரு வாலிபர்கள் ஒரு சைக்கிளில் நிலாவரைப் பக்கத்தில் இருந்து வந்துகொண்டிருந்தார்கள். ஐந்தடி தூரத்தில் வந்ததும் ஒரு வெடிச் சத்தம் கேட்டது. நான் கொலனியிலுள்ள எனது வீடு நோக்கி ஓடினேன். 200 யார் போனதும் மேலும் 5 வெடிச்சத்தங்கள் கேட்டன. பின்னர் திரும்பவும் மாமனார் வீடு நோக்கி நான் வந்தபோது ஒருவர் சைக்கிளுடன் வீட்டுப் படலையில் நின்றார். சாரம் உடுத்தவர் வந்துகொண்டிருந்தார். இருவரும் சைக்கிளில் ஏறிச் சென்றுவிட்டனர். அப்பொழுது தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த எனது மாமனார் வைரவன் சின்னவன், மாமியார் சரசு சின்னவன் வேறு ஆட்களும் வந்து சேர்ந்தனர். இறந்தவரைத் தேடிப் பார்த்த பொழுது ஆட்டுக்கொட்டிலடியில் துப்பாக்கிச் சூடுகள்பட்டு இறந்துகிடந்தார்''

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதிபதி, சுன்னாகம் பொலிசாரை தொடர்ந்து விசாரணைசெய்யும்படி தெரிவித்து, இம்மாதம் 18ம் திகதி தீர்ப்புவழங்குவதை ஒத்தி வைத்தார். தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி எஸ். கதிரவேலுப்பிள்ளைபிரேத பரிசோதனை செய்தார்.

[மா]

## அகதிகளுக்கு இலவச உடைகள்

(பண்டத்தரிப்பு)

சமீபத்திய கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துவந்துள்ள வலிதென்மேற்கு உதவி அரசாங்க அதிபா பிரிவிலுள்ள அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உடைப்பார்சல்களை அன்பளிப்பாக வழங்கியது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வைத்து பண்டத்தரிப்பு, மாதகல், சங்கானை வடக்கு, இளவாலை, பெரியவிளான் ஆகிய கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலுள்ள அகதிகளுக்கும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் வைத்து மானிப்பாய், சுதுமலை, நவாலி, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய் ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலுள்ள அகதிகளுக்கும் இவை வழங்கப்பட்டன. யாழ். அரசாங்க செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் இதில்கலந்துகொண்டார்.

## அப்துல் கயூம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனுப் அப்துல் கயூம் எதிர்வரும் நவம்பர் மாதம் 11-ம் திகதி ஜனாதிபதி பதவியை ஏற்கவுள்ளார்.

கடந்த மாதம் 30 - ம் திகதி மாலைதீவில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஜனுப் அப்துல்கயூம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்கு 95 சத வீதமான வாக்குகள் கிடைத்துள்ளது. அளிக்கப்பட்ட 60,664 மொத்த வாக்குகளில் 57,000 க்கும் அதிகமான வாக்குகள் அப்துல் கயூமுக்குக் கிடைத்தது. [வெ]

## நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் உட்பட இயக்குனர்சபை உறுப்பினர்கள் ஐவர் மீது சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் போது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒருவாக்கினால் தோல்வியடைந்தது.

சங்கத் தலைவர் திரு. வே. சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி பிரேரணை மீது காரசாரமான விவாதம் நடைபெற்றது. முடிவில் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 31 வாக்குகளும் எதிராக 31 வாக்குகளும் கிடைத்தன. இந்நிலையில் சங்கத் தலைவர் திரு. சேனாதிராசா தமது வாக்கை பிரேரணைக்கு எதிராக வழங்கியதை அடுத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தது. இக்கூட்டத்தில் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். பாலசுந்தரமும் கலந்துகொண்டார்.

## 4ம் கட்ட உணவுப் பொருள்கள்

(மாட்விடபுரம்)

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளுக்கான 4ம் கட்ட உணவுப் பொருள் விநியோகம் இம் மாதம் 7ம் திகதி முதல் வழங்கப்பட உள்ளது.

## 120 சாதாரண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் காவலிலிருந்தவர்கள் தவிர்ந்த சாதாரண கைதிகளில் 54 பேர் கொலை, கொள்ளை சம்பவங்கள் தொடர்பாக காவலில் இருந்தவர்களாம்.

பயங்கரவாத தடைச்சட்ட கைதிகளை மீட்பதற்காக நடத்தப்பட்ட சிறை உடைப்பு சம்பவத்தைப்பயன்படுத்தி தப்பிச் சென்றுள்ள இக்கைதிகள் மட்டக்களப்பிலேயே இருப்பார்கள் என்று நம்பும் பொலிசார் அவர்களை தொடர்ந்து தேடிவருகின்றனர். (கு)



## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு விநாயகமூர்த்தி

திரு. முத்துக்குமாரு விநாயகமூர்த்தி (இளைப்பாறிய H. Q. I. கூட்டுறவு இலாகா) காலமானார். இவர் கங்காவின் அன்புக் கணவரும் நீலலோஜனன் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, மன்னார்), ஷயா (சட்டத்தரணி), சர்ணியா (கணக்காளர், மாதவன் லங்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பா (ஆசிரியை, புனித சேவியர் கல்லூரி, மன்னார்), சிறீகாந்தா (பொறியியலாளர், அமிக்கோ இன்டஸ்றீஸ்), ஆகியோரின் மாமனாரும், றஜீவ், நிஷோ, ஆகியோரின் அருமைப் பாட்டனுமாவார். 15-09-83ல் காலமாகிய அன்னாரின் இறுதிச் சடங்குகள் 17-09-83ல் அராலியில் நடைபெற்றது.

C/O K. S. S. தாஸ்,
கொக்குவில் றோட், திருநெல்வேலி.

9105


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B 100236/81. Eelanadu-P. O Box: 49. Telegram: Eelanadu, Telephone: 22389—?4126.